# இலங்கையில் சாதியம் செயற்றிட்டம்

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | இலங்கையில் சாதியம் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0018 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஒக்டோபர் 2020 - மார்ச் 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | வடு, தலித் மேம்பாட்டு முன்னணி, தங்கேஸ்பரம்சோதி |
| முக்கிய பங்குத்தாரர்கள் | எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2020 - LKR 75,000.00<br>2021 - LKR 115,500.00<br>2022 - 32,750 |

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

இலங்கையில் சிங்களவர், இலங்கைத் தமிழர், மலையகத் தமிழரிடையே மூன்று இணையான சாதியமைப்புக்கள் காணப்படுகின்றன. நூலக நிறுவனத்தின் இலங்கையில் சாதியம் என்னும் இச்செயற்றிட்டம் இலங்கையில் தமிழ் பேசும் மக்களிடையே காணப்படும் சாதி தொடர்பான ஆவணங்களை எண்ணிம, பல்லூடக முறையில் ஆவணப்படுத்தவும் பாதுகாக்கவும் பகிரவுமும் முயற்சிக்கின்றது. இலங்கைவாழ் தமிழர்களிடையேயுள்ள சாதி முறைமைகள், சாதியத்தின் இயங்குநிலைகள், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளன.

இப்போராட்டங்கள் இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்திற்கு முன்னர் வெளித்தெரியும் (manifest) அகிம்சை மற்றும் ஆயுதப் போராட்டங்களாக உருவெடுத்தது தொடக்கம் தற்பொழுது வெளித்தெரியா (latent) கோயில் கட்டுமானங்கள் போன்ற செயற்பாடுகள் வரை நீண்டு செல்கின்றன. இத்தகையதொரு பின்னணியில், இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களிடையேயுள்ள சாதி தொடர்பான ஆவணங்களைத் தேடியும், ஆவணப்படுத்தியும், அவற்றைப் பகிர்ந்தும், சாதியத்துக்கு எதிரான விழுப்புணர்வு, கல்வி, ஆய்வு, எதிர்ப்புப் போராட்டங்களுக்கு பயனுள்ளதாக்க நூலக நிறுவனம் இச்சிறப்புச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

இலங்கையில் சாதியம் செயற்றிட்டமானது 2020 ஒக்கோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2021 மார்ச் மாதம் வரை இடம்பெற்றது. அவற்றுள் குறிப்பாக சிறுபான்மை தமிழர் மகாசபை, நிச்சாமம் , மாவிட்ட புரம் கோயில் ஆகிய போராட்டங்கள் சார்ந்து செயற்பட்டவர்களை அணுகி அவர்களது அனுபவம் சார்ந்த விடயங்களுக்கூடாக சாதி சார்ந்த அடையாளப்படுத்தல்களைக் கண்டறிதல், போராட்டங்கள் சார்ந்த விடயப்பரப்பை முதன்மைப்படுத்தல் அதனூடாக அடையாளப்படுத்தப்பட்டவர்களை வாய்மொழிவரலாறு எடுத்தல் என்ற ரீதியில் திட்டமிடப்பட்டு முன்னகர்த்தப்பட்டது. இச்செயற்றிட்டம்ம் ஆறு மாதகாலங்களே இடம்பெற்றன.

## செயற்றிட்ட அடைவு மட்டம்

| சேகரங்கள் | அடைவு மட்டம் |
|---|---|
| வாய்மொழி வரலாறுகள் | 22 |
| நூல்கள் | 65 |
| இதழ்கள் | 24 |
| படங்கள் | 3 |
| ஆளுமைக்குறிப்பு | 1 |

01. P.J அன்ரனி
02. தெணியான்
03. சின்னத்தம்பிமகாலிங்கம்
04. மோகநாதன் வைரவன்
05. பொன்னையா பாலச்சந்திரா
06. சின்னட்டி செல்லத்துரை
07. சீனியர் குணநாயகம் (குணசிங்கம்)
08. பண்டாரி செல்லத்துரை
09. தங்கவடிவேல் கந்தன்
10. விசுவாசம் ஜெகநாதன்
11. வெற்றியன் இராசரத்தினம்
12. கந்தப்புஇராஜரட்ணம்
13. ஆசையன் சுப்பிரமணியம்
14. செல்வக்கிளி சின்னத்தம்பி
15. செல்வம் கதிர்காமநாதன்
16. சி. கா. செந்திவேல்
17. வைரவன்  சின்னத்தம்பி
18. நாராயணப்பிள்ளை யோகேந்திரன்

19. கணபதி சுப்பையா
20. கார்த்திகேசு பஞ்சலிங்கம்
21. துரையர் இராசரட்ணம்
22. முருகன் சின்னையா

ஆகிய ஆளுமைகளிடமிருந்து வாய்மொழி வரலாறுகள் பெறப்பட்டுள்ளன.

### சாதியம் தொடர்பாக அடையாளப்படுத்தப்பட்ட கட்டுரைகள்

| தலைப்பு | இதழ் | ஆசிரியர் | ஆண்டு | பக்கம் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணத்தில் சாதியமைப்பு - ஒரு சமூகவியல் பரிசீலனை | அ ஆ இ | வ.ஐ.ச.ஜெயபாலன் | புரட்டாதி 1993 | 33 |
| அனலும் மலரும் | அக்கினிக்குஞ்சு | வைகாசி 1991 | - | 22 |
| ஒரு நாய்ப் பயல் | அஞ்சலி (வத்தளை) | யோ.பெனடிக் பாலன் | பங்குனி 1971 | 37 |
| எப்படியும் பெரியவன் தான் | அஞ்சலி (வத்தளை) | தெணியான் | ஆனி 1971 | 41 |
| இயல் விருது சாதி அரசியலின் முழுவடிவம் | அறிதுயில் | கற்சுறா | பங்குனி 2005 | 05 |
| குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் | அறிதுயில் | சுகன் | பங்குனி 2005 | 17 |
| நம்மிடம் ஏது குறை | அலை ஓசை (லண்டன்) | புலவர் | வைகாசி-ஆனி 1990 | 09 |
| சாதிப்போராட்டம் | ஆகவே | வெங்கட்சாமிநாதன்(ஆங்கிலம்),ஸ்டான்லி சொலமன் (தமிழில்) | மாசி 1993 | 13 |

| | | | | |
|---|---|---|---|---|
| இலங்கையில் பரதவர் சமூகமும் மாற்றங்களும் | ஆக்காட்டி | ச.தில்லை நடேசன் | புரட்டாதி-ஐப்பசி 2014 | 11 |
| ஃபன்றி - சாதியில் உயர்ந்த நிலம் | ஆக்காட்டி | ச.தில்லை நடேசன் | புரட்டாதி-ஐப்பசி 2014 | 18 |
| தலித் என்னும் ஏற்க மறுக்கும் தமிழ் மனம் | ஆக்காட்டி | தேவதாசன் | ஆடி-ஆவணி 2015 | 22 |
| சாதி தொகை நிலையும் தொகாநிலையும் | ஆக்காட்டி | செல்லத்துரை சுதர்சன் | புரட்டாதி-ஐப்பசி 2015 | 39 |
| படிப்படியான சமத்துவமின்மையில் வாழும் சமூகம் | ஆக்காட்டி | இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி - பிரான்ஸ் | தை-பங்குனி 2016 | 44 |
| நான் வெள்ளாளன், பிராமணன் பள்ளிக்கூடம் போற பெடியன் | ஆக்காட்டி | ஹரி ராஜலட்சுமி | ஆடி-புரட்டாதி 2016 | 07 |
| சாதிய சமூக ஒடுக்குமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பண்பாட்டு கலாசார தளத்தில் செயற்படும் எந்த இயக்கமும் எம் மத்தியில் தற்போது இல்லை | ஆக்காட்டி | இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி | ஐப்பசி-மார்கழி 2016 | 55 |
| அ. முத்துலிங்கமும் வெள்ளாள சாதி உளவியலும் | ஆக்காட்டி | தர்மு பிரசாத் | ஐப்பசி-மார்கழி 2017 | 04 |

| | | | | |
|---|---|---|---|---|
| சாதியமும் ஆட்டத்திற்கு எதிரான போராட்டமும் | ஆக்காட்டி | பிருந்தன் | ஐப்பசி-மார்கழி 2017 | 45 |
| அஞ்சலி என்.கே.ரகுநாதன் -தலித் இலக்கிய முன்னோடி | ஆக்காட்டி | தர்மு பிரசாத் | 2019 | 04 |

எதிர்கொண்ட சவால்கள்

- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- சாதியம் சார்ந்து செயற்பட்ட நபர்களை தொடர்புகொண்டு வாய்மொழி பெறுதல் ஓர் சவாலான காரணியாக அமைந்தது.குறிப்பாக ஆவணங்களை வாய்மொழி வரலாற்றை வழங்குவதில் அவர்களுக்கு தயக்கம் காணப்பட்டமை.
- வாய்மொழி வரலாற்றை தொடர்ச்சியாக பெறுவதில் ஏற்பட்ட கால தாமதம்.
- வாய்மொழி வரலாறு நிகழ்கலைக்கு அறிமுகம் செய்யப்பட்டு கோவிட் காரணமாக பெறப்பட்டது. அதற்கான எதுவிதமான பயிற்சிகளும் வழங்கப்படவில்லை.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- சாதியம் சார்ந்த இலங்கையில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பான பின்புல ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுதல் அவசியம்.
- ஊழியர்களுக்கு வாய்ழொழி வரலாறு, ஆய்வு சார்ந்த பின்புலங்களை உருவாக்குதல் புதிய ஆய்வுகளை இனங்காணுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- வாய்மொழி வரலாற்றுக்கான நிறுவனத்திற்கான கையேடு ஒன்றினை விரைவாக உருவாக்குதல். அதற்கூடாக செயற்றிட்ட நோக்கங்களை முதன்மைப்படுத்தி வாய்மொழி வரலாற்றுக்கான தொடர்புகளை விரிவுபடுத்தல்..
- கருவிகளை கையாள்வதில் வெளி வளவாளர்களை உள்ளீர்த்து இலகு முறைமைகளை அறிமுகம் செய்தல்.
- சவால்கள் அனுபவங்களுக்கான உடனடித்தேவைகளை நிவர்த்தி செய்தல்.
- தன்னார்வலர்களை இணைத்து ஏனைய பிராந்தியம் விடயங்களை உள்ளீர்க்க முடியும். ஆலோசகர்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களுக்கூடாக தரவுகளை பெற்றுக்கொள்ளுதல்.

பின்னிணைப்புக்கள்

இலங்கையில் சாதியம்